(முற்பகல் 9-50)

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, சைதாப்பேட்டையில் புதிதாக நடுவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னார்கள். அங்கே நடுவர் இல்லாமல் எத்தனை மாதமாக இருந்தது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? இப்படி அடிக்கடி நடுவர் இல்லாமல் நீதிமன்றங்கள் இருந்தால், அதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் நடுத்தர மக்களும், ஏழை எளிய மக்களும்தான். ஆகையால் இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அங்கே தற்காலிகமாக இருந்த நடுவர் விடுப்பில் சென்ற காரணத்தால் 'வேக்கன்சி' ஏற்பட்டது. அந்த இடத்தைப் பூர்த்தி செய்வதற்காக 28-4-81-ல் ஒரு நடுவர் நியமிக்கப்பட்டார். அதனால் தேக்கம் அதிகம் ஏற்படவில்லை. தேவைக்குமேல் நடுவர்கள் இல்லாத காரணத்தால் ஒருவர் விடுப்பில் சென்றால், அவர் விடுப்பிலிருந்து வரும்வரையில் அந்த இடம் காலியாக இருக்கிறது. அதைக்கூட நிவர்த்தி செய்ய தற்போது உயர்நீதி மன்றத்துடன் ஆலோசனை செய்து வருகிறோம், நீதிபதிகள் எங்காவது விடுப்பில் செல்லும் போது அந்த இடங்களைப் பூர்த்தி செய்ய, ரிசர்வேஷன் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்களை வைத்துக் கொண்டால் நல்லது என்று அரசு கருதுகிறது. அதுபற்றி உயர்நீதி மன்றத்துடன் அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. பின்னர் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

சிதம்பரத்தில் சாக்கடை அமைக்கும் திட்டம்.

* வினா எண் 110 திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னார்காடு ஜில்லா சிதம்பரம் நகரத்தில் சாக்கடை திட்டம் சரியாக பணியாற்றவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) சிதம்பரம் சாக்கடைத் திட்டம், அங்குள்ள பொதுமக்கள் வீட்டு இணைப்புகள் பெற முன்வராததால், நல்ல முறையில் இயங்கவில்லை. தற்போது சிதம்பரம் நகராட்சி வீட்டு இணைப்புகள் கொடுத்து, இத்திட்டம் நல்ல முறையில் இயங்க தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த திட்டத்திற்கு மூலதனமாக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு மக்கள் முன்வரவில்லை என்று சொன்னார்கள். மக்கள் இந்தத்

1981 ஆகஸ்ட் 31]

திட்டம் வேண்டுமென்று சொல்லி, அவர்கள் முனிசிபாலிட்டி மூலமாக தகவல் கொடுத்து, இங்கே அரசாங்கத்தில் அது சம்பந்தப்பட்ட கோப்புகள் நீண்ட நாட்களாக கவனிக்கப்படாமல் இருப்பதுதான் உண்மை என்று தெரிகிறது. அப்படி இருந்தால் உடனடியாக அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி அவ்வளவு சரியாக இல்லை என்று கருதுகிறேன். இந்தத் திட்டத்தைக் கொண்டுவரும்போது மொத்தம் இத்தனை இலட்சம் ரூபாய் செலவாகும்; அந்தப் பணத்தை முனிசிபாலிடி திருப்பித் தந்தாக வேண்டும்; திருப்பித் தருவதற்கு என்னென்ன ரிசோர்ஸஸ் இருக்கின்றன என்று எழுதும்போது 'நாங்கள் இவ்வளவு பணம் தருவோம், இவ்வளவு ஹவுஸ் கனக்ஷன் கொடுப்போம். இவ்வளவு வாட்டர் டாக்ஸ் உயர்த்தப்படும்; அதனால் இவ்வளவு ரூபாய் அதிகமாக வரும்; அவைகளை எல்லாம் சேர்த்து கொடுப்போம்' என்று சொன்னார்கள். ஆனால் அங்குள்ள மக்கள் வீட்டு இணைப்பு எடுத்துக்கொள்ள முன்வரவில்லை. எங்காவது ரோட்டிலே சாக்கடை போகட்டும், போனால் நமக்கு என்ன என்று இருந்துவிட்டார்கள். அதற்குப் பின்னால் அதிகாரிகளின் முயற்சியினால் 1981–82-ல் 1033 வீடுகளுக்கு இணைப்புக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் வழங்குவதாக இருந்தாலும், சாக்கடை வசதி செய்து கொடுப்பதாக இருந்தாலும் அதிகமாக ஹவுஸ் கனக்ஷன் எடுத்துக்கொண்டால் அந்த அளவுக்கு அந்த முனிசிபாலிடிக்கு வருமானம் கிடைக்கும். அதனால் ரீப்பேயிங் கெபாசிட்டி அதிகமாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தகவல் போதும் என்று கருதுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் அதிகப் படியான 'ரேட்' கேட்கப்பட்டதால் மக்கள் ஹவுஸ் கனக்ஷன் பெற முன்வரவில்லையா? அல்லது அதிகாரிகள் அல்லது ஸ்பெஷல் ஆபீசர்கள் அது சம்பந்தமாக அதிக அக்கறை காட்டவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்த கனக்ஷன் பெறுவதால் நமக்கு ஏன் வீண் செலவு? நம் வீட்டிலிருந்து போகிற கழிவுநீர் எப்படியாவது போய்விடும், அல்லது எங்காவது போகட்டும் என்று மக்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள்; அதனால் முன்வரவில்லை. அதன் பிறகு அதிகாரிகள் கொஞ்சம் வசதி படைத்தவர்களை அணுகி, இப்படி சாக்கடை போனால் சுகாதார கேடு அல்லவா, நீங்கள் 'ஹவுஸ் கனக்ஷன் எடுத்துக் கொண்டால் உங்களுக்கு வசதியாக இருக்கும் அல்லவா? அதனால் முதலில் நீங்கள் எடுத்துக்கொள் ளுங்கள் என்றுசொல்லுகிறார்கள். அதைப்போலவே குடிநீர் குழாய் தெருவிலே இருந்தாலும், வசதி படைத்தவர்களை அணுகி ஹவுஸ்

கனக்ஷன் எடுத்துக் கொள்ளச் சொல்கிறார்கள். இப்படி அதிகாரிகள் சொல்வதற்குக் காரணம், ஹவுஸ் கனக்ஷன் எடுப்பதால் முனிசிபாலிட்டிக்கு பணம் வருகிறது. ஆவே, முதலிலே மக்கள் முன்வரவில்லை. பின்னர் அதிகாரிகள் பேசி, 1981—82-ல் 1,000 ஹவுஸ் கனக்ஷன் பெறும் வாய்ப்பு எற்பட்டிருக்கிறது. இப்போது அந்த எண்ணம் ரொம்ப முன்னேறி வேலை நடந்து கொண்டிருக்கிறது.

நேர்த்தியாயிருப்பு கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண். 111—திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனத்திலிருந்து அருப்புக்கோட்டைக்கு குடி தண்ணீர் கொண்டு செல்லும் வழியிலுள்ள நேர்த்தியாயிருப்பு கிராமத்திற்கும் தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும் என்று கிராம மக்களிடமிருந்து கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி கிராமத்திற்கு தண்ணீர் வழங்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) நேர்த்தியாயிருப்பு கிராமத்தில் ஒரு திறந்த கிணறும் ஒரு ஆழ்துளை கிணறும் உள்ளன. இதில் கிடைக்கும் நீர் குடிப்பதற்கு ஏற்றதாக உள்ளது. எனவே ஊரகக் குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் அளிக்க இயலாது. இருப்பினும் அருப்புக்கோட்டை குடிநீர் திட்டத்தின் கீழ் இக்கிராமத்திற்கு குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்த ஊரிலே ஒரு திறந்த கிணறும் ஆழ்குழாய் கிணறும் இருக்கின்றது என்று சொன்னார்கள். அந்த நேர்த்தியாயிருப்பு கிராமம் உள்வாய்த்துறை பஞ்சாயத்தைச் சேர்ந்தது. அந்தப் பஞ்சாயத்தின் பொது நிதியிலிருந்து பணம் செலுத்தப்பட்டு அதன் மற்ற பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் கிடைக்கின்றபோது இந்தப் பகுதிக்கு மட்டும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கொடுக்கப்படாத நிலைமை இருக்கின்றது. ஆகவே அந்த கிராமத்திற்கும் இதனை விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, குடிநீர் கொடுப்பதற்காக கிராமங்களை 6 வகையாகப் பிரித்திருக்கிறோம். இந்தக் கிராமம் 6-வது வகையிலே வருகின்றது அதாவது நல்ல தண்ணீர் வருஷம் பூராவக்கும் அங்கே கிடைக்கின்றது. அதனால் தான் அந்த ஊருக்கு கொடுக்காமல் மற்ற ஊர்களுக்குக் கொடுக்கிறோம். அந்த